[23rd March 1959

SRI A. GOVINDASAMY : தீ விபத்துக்கு உள்ளாகின்ற ஏழைகளுக்குக் கொடுக்கிற நிவாரணத் தொகையான ரூபாய் 30 போதவில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அந்தத் தொகையை உயர்த்தித் தர அரசாங்கம் ஆலோசிக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இது அம்மாதிரி நஷ்டம் ஏற்படுகிற காலத்தில் ஓரளவுக்கு கைதூக்கி விடுகிற வகையிலே இது அமைந்திருக்கிறது. எல்லாவற்றிற்கும் கொடுப்பதாக இருந்தால், பணம் அதிகமாக இருந்தால் கொடுக்கலாம்.

Payment of salaries to aided elementary school teachers.

* 17 *S.N.Q.*—SRI A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) உதவி பெறும் ஆரம்பப்பள்ளிகளுக்கு கடந்த நவம்பர், டிஸம்பர், ஜனவரி 3 மாதங்களுக்கு ஆசிரியர் சம்பளம் கொடுக்கப்படாததற்குக் காரணம் என்ன ?

(ஆ) இவர்களுக்கு சம்பளம் எப்போது கொடுக்கப்படும் ?

(இ) இனி, இவ்வாறு நிகழாதிருப்பதற்கு அரசாங்கம் என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள் ?

(ஈ) மூன்று மாதங்கள் கழித்து சம்பளம் வந்த பள்ளி ஆசிரியர்களின் சம்பள பில்லை கஜானாக்களில் பணம் பட்டுவாடா செய்ய மறுத்திருப்பது அராசாங்கத்திற்குத் தெரியுமா ?

(உ) அதன் காரணம் என்ன ? இவ்விதத் தகராறுகள் இனி நிகழாது செய்ய அரசாங்கம் என்ன முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) to (*e*) Government have no information readily. Particulars have been called for from subordinate authorities. As soon as the particulars are received, a statement will be placed on the table of the House. If on receipt of the particulars it is found that payment of salaries is in arrears in any case, Government will consider the question of devising suitable means of ensuring prompt payment of salaries in aided schools.

SRI A. VEDARATHNAM : இந்தக் கேள்வியைக் கொடுத்தே கிட்டத் தட்ட மூன்று வார காலம் ஆகிறது. இன்னும் அராசங்கத்திற்கு இதன் பதில் கிடைக்காமல் காலதாமதப் படுவதன் காரணம் தெரியவில்லை. அன்றியும், என்.ஜி.ஓ-க்கள் போன்றவர்களுக்குச் சங்கராந்திக்கு அட்வான்ஸ் கொடுக்கும் போது, ஆசிரியர்களுக்கு மூன்று மாதம் சம்பளத்தை நிறுத்தி வைத்திருப்பது நியாயமா ? இதில் தவறு எங்கிருக்கிறது என்று கண்டுபிடித்து அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்போகிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதைப் பற்றித் தான் நான் சொன்னேன். இதிலே எல்லாப் பள்ளிகளுக்கும் எல்லா ஜில்லாக்களைப் பற்றியும் கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது. எங்கெங்கு தவறு நடந்திருக்கிறது என்பதைப் பற்றியெல்லாம் பூரா விவரமும் வரவில்லை. எங்கு தவறு ஏற்பட்டது, இதைத் தவிர்க்க என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் விவரம் தெரிந்த பிறகுதான் முடிவு செய்ய வேண்டும்.

SRI A. VEDARATHNAM : மூன்று மாதங்கள் கழித்து வந்த பில்களும் டிரெஷரியில் அதை காஷ் பண்ண முடியாமல் பில்கள் குறைபாடு உடையவைகளாக இருந்த காரணத்தினால் திருப்பி அனுப்பப்பட்டன. இருபது அல்லது 25 மைல்களுக்கு அப்பால் டிரெஷரிக்குப் போய் பணம் கிடைக்காமல் ஆசிரியர்கள் திரும்பி வர நேர்ந்தது. குறிப்பாக திருத்துறைப்பூண்டி தாலூகாவில் இம்மாதிரி நேர்ந்தது என்று கனம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஆகையால் எங்கு தவறு நேர்ந்திருக்கிறது என்று கண்டு பிடித்து அதற்குத் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா ?

23rd March 1959]

THE HON. SRI C. SUBRAMANIAM: இவ்வாறு முதலிலேயே குறிப்பிட்டுச் சொல்லியிருந்தால் அதை உடனடியாகக் கண்டுபிடித்திருக்க முடியும். மூன்று மாதங்கள் கழித்து சம்பளம் வந்த பல பள்ளி ஆசிரியர்களின் சம்பள பில்லை கஜானாக்களில் பணம் பட்டுவாடா செய்ய மறுத்திருப்பது என்று சொன்னால், கஜானாக்கள் நிறைய இருக்கின்றன. குறிப்பான தகவல் இருந்து அதைக் கொடுத்திருந்தால் இதற்குள்ளாகக் கண்டு பிடித்திருக்க முடியும். பொதுவாகக் கேள்வி போட்டதால்தான் தாமதம் ஆகிறது.

SRI N. K. PALANISAMI: ஸார், இந்த மாதிரி தாமதம், சரியானபடி சம்பளம் கொடுக்காதது, இவைகளைப் போக்க சர்க்காரே நேரடியாக சம்பளத்தைக் கொடுக்க யோசனை செய்வதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது எப்போது அமுலுக்கு வரும் என்பதைத் தெரிவிக்க முடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: இப்போது ஆரம்பம் செய்திருக்கிறோம். ஆயிரம் பள்ளிகளில் அடுத்த ஆண்டில் இருந்து நேரடியாக ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுப்பதாக இருக்கிறது. சம்பளம் வாங்கி நடத்தி வந்த பள்ளி ஆசிரியர்களுக்கு இம்மாதிரி செய்யப் போகிறோம்.

SRI S. LAZAR: ஸார், திருச்சி ஜில்லா போர்டின் கீழ் வேலை செய்யக்கூடிய பள்ளிகள் அத்தனையிலும் ஒரு சில மாதங்களாக சம்பளம் கொடுக்கப்படவில்லை, அதற்குக் காரணம் டிஸ்டிரிக்ட் போர்டிடம் பணம் இல்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அதற்கு உடனடியாக அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: இது எய்டெட் ஸ்கூல்களைப் பற்றியது. திடீரென்று ஜில்லா போர்டுகளைப் பற்றி கேட்டால் என்னிடம் இப்போது தகவல் இல்லை.

Arrest of persons for Prohibition offence in Periyakulam

* 937 *Q.*—SRI V. K. KRISHNAMURTHY (on behalf of SRI N. R. THIAGARAJAN): கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1958-ம் ஆண்டு ஜூலை அல்லது ஆகஸ்ட் மாதத்தில் மதுரை ஜில்லா பெரியகுளம் பஜாரில் சிவகங்கை ஆசாமிகள் பலர் குடித்துவிட்டுக் கூத்தாடியதற்காக கைது செய்யப்பட்டனரா ?

(ஆ) அவர்களில் எத்தனை பேர் மீது வழக்குத் தொடரப்பட்டது ? எத்தனை பேரை வழக்குத் தொடராமல் போலீசாரே தப்புவித்து விட்டனர் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes, Sir.

(*b*) Out of the five persons arrested, four were charge-sheeted by the Police and convicted by the Sub-Magistrate, Uthamapalayam. The fifth was left out. The conduct of the Police subordinate in not charge-sheeting this person is under investigation.

SRI K. R. VISWANATHAN: Sir, may I know the names of the persons arrested?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, about this case, there is an appeal pending before the Sessions Court and, therefore, I would suggest to the hon. Member not to put further questions.